# ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் இனமுரண்பாட்டின் பிரதிபலிப்பு

*Murukaiya Sathees*
*Assistant Lecturer, Department of Tamil, University of Jaffna*
*satheesmurukaiya@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

*இலங்கையில் சிங்களவர், தமிழர், தமிழ் பேசும் முஸ்லிம்கள் என மூன்று இனங்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்றனர். சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையில் ஒற்றையாட்சிமுறை தொடர்ந்ததால் பெரும்பான்மையான சிங்களவர்களின் மேலாதிக்கம் ஏற்பட்டது. இதனால் இனமுரண்பாடு வளரத் தொடங்கியது. இலங்கை நாட்டின் தேசிய இனங்கள் தம் அடையாளத்தை நிலைநிறுத்திக் கொள்ள இனம், மொழி, பண்பாடு, சாதி, பொருளாதாரம் முதலிய இன்னோரன்ன விடயங்களுக்காகப் பிணக்குற்றனர். இதனையே இனமுரண்பாடு என்கிறோம். தமிழ் மக்களும் தம் உரிமைகளுக்காகச் சாத்வீக முறையில் போராடினர். 1956 இல் நடந்த தமிழர்களின் சாத்வீகப் போராட்டத்தை எதிர்த்துத் தெற்கில் இனக்கலவரம் ஏற்பட்டது. தொடர்ந்தும் நாட்டில் இனக்கலவரங்கள் ஏற்பட்டன. ஆட்சியாளர்களின் சிங்களக் குடியேற்றங்கள், மொழியுரிமை பறிப்பு, உயர்கல்வியில் தரப்படுத்தல் எனப் பல்வேறு ஒடுக்குமுறைகளால் தமிழர்கள் பாதிக்கப்பட்டனர். முரண்பாடு ஆயுதப் போராட்டமாக மாறியது. அரசபடைகளும், ஆயுதக்குழுக்களும் மோதின. இதனால் மக்கள் பாதிக்கப்பட்டனர். வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அமைதி குன்றலாயிற்று. பல்லாயிரக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் அகதிகளாயினர். நாட்டை விட்டும் புலம்பெயர்ந்தனர். இப்பிரச்சினைகள் அக்காலச் சூழலில் தோன்றிய ஆக்க இலக்கியங்களில் பிரதிபலித்தன. குறிப்பாக 1980 - 1990 வரையான காலகட்டத்தில் எழுந்த ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் அவை தீவிரமாக மேற்கிளம்பின. அக்காலகட்டத்தில் எழுந்த ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் இனமுரண்பாடு வெளிப்படுத்தப்பட்ட வகையினையும், இனமுரண்பாட்டிற்கான காரணங்களையும், அக்காலச் சமூக, அரசியல், பொருளாதார நடைமுறைகளிலும், மனித சிந்தனைகள் மற்றும் வாழ்வியல் போக்குகளிலும் இனமுரண்பாடு ஏற்படுத்திய பாதிப்புக்களையும், இனங்களுக்கு இடையிலான பகைமைத்தன்மையாக இனமுரண்பாடுகள் வளர்ந்த விதத்தையும் விளக்குவதே இவ் ஆய்வின் நோக்காகும். இவ்வாய்விற்கு, 1980 - 1990 கள் வரையான காலகட்டத்து இனமுரண்பாடு மற்றும் போர்க்கால வரலாறு பேசும் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள் முதன்மை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இனமுரண்பாடுசார் அரசியல் - வரலாற்று நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், ஆய்வேடுகள், கட்டுரைகள் என்பன துணை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. விபரண முறையியல் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பகுப்பாய்வு, ஒப்பாய்வு, விளக்கியுரைத்தல் முதலிய அணுகுமுறைகளும் இங்கு பிரயோகிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஈழத்தில் இனமுரண்பாடு வளர்ந்த வரலாற்றையும், அவை 1980 - 1990 வரையான காலகட்ட ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் பிரதிபலிக்கப்பட்டிருக்கும் தன்மையையும், போர்ச்சூழலையும், மக்கள் அனுபவித்த துன்பியல் வாழ்வையும், அவற்றினை அனுபவ வெளிப்பாடுகளாய் வெளிப்படுத்தி வாசக மனங்களில் நிலைப்படுத்த கதையாசிரியர்கள் கையாண்ட நுட்பங்களையும் தெரிந்து கொள்ள முடியும்.*

***திறவுச் சொற்கள்:*** *ஈழம், தமிழ்ச் சிறுகதைகள், இனமுரண்பாடு, பிரதிபலிப்பு*

---

*1.* ***ஆய்வு அறிமுகம்***

*ஈழம் என்பது இலங்கைத்தீவைக் குறிக்கும் பண்டைய தமிழ்ப்பெயராகும். இச்சொல்லாட்சி பழந்தமிழ் இலக்கியங்களிலும் கையாளப்பட்டுள்ளது. இலங்கை அரசியல் வரலாற்றில் 1980 - 1990கள் வரையான காலகட்டம் இனப்போராட்டம் மேலோங்கிய காலம். தேசியம் என்ற உணர்வு தேய்ந்து தமிழ்த் தேதியம் என்ற உணர்வு தமிழ் மக்களிடையே தீவிரம் பெற்றது. 1983 களில் நடந்த இன்கலவரத்தின் பின் தவிர்க்க முடியாமல் தமிழீழப் போராட்டமாக மாறியது. தமிழருக்கான பாரம்பரிய ஆள்புல உரிமைகளைக் கோரி ஆயுதமேந்திய இளைஞர்களின் போராட்டம் பெரும் யுத்தமாக மாறியது. மரணங்கள், அங்கவீனங்கள், இடப்பெயர்வுகள், அகதி வாழ்வுகள், கைதுகள், காணாமலாக்கப்படல், பாலியல் வன்முறைகள் எனத் தாங்கொணாத் துயரங்களால் தமிழ்மக்கள் மூழ்கடிக்கப்பட்டனர்.*

*இதுதவிர சகோதர ஆயுதக் குழுக்களுக்கிடையிலான போராட்டங்களும், வன்முறைகளும் அரங்கேறிக் கொண்டிருந்தன. இத்தகைய இனப்போராட்டம் தீவிரம் பெற்ற யுத்த சூழ்நிலைகளையும், அதனால் உண்டான விளைவுகளையும் உள்வாங்கிய நிலையில் தனிமனித, சமூக அனுபவ வெளிப்பாடுகளாய் சிறுகதைப் படைப்புக்கள் வெளிவந்தன. ஒரு நாட்டின் பல்தேசிய இனங்கள் அல்லது இனக்குழுக்கள் பெரும்பாலும் தம் அடையாளத்தை நிலை நிறுத்திக் கொள்ள இனம், மதம், மொழி, சாதி, பண்பாடு, பொருளாதாரம் முதலிய இன்னோரன்ன காரணிகளூடாகப் பிணக்குறுவதை இன முரண்பாடு எனலாம். இத்தகைய இன முரண்பாட்டின் விளைவுகளால்த் தோன்றிய தேசிய இனப்போராட்டம் 1980 - 1990 களில் உச்சமடைந்து மக்களின் வாழ்க்கையை அவலங்களாக மாற்றின. இவை அக்காலத்தில் படைக்கப்பட்ட சிறுகதைகளிலும் தீவிரமாக மேற்கிளம்பின.*

*2.* ***ஆய்வின் எல்லை***

*இவ்வாய்வின் எல்லைகளாக இரண்டு விடயங்கள் முக்கியம் பெறுகின்றன. ஒன்று கால எல்லை. மற்றையது பேசுபொருள் எல்லையாகும். 1980 - 1990கள் வரையான, ஈழப்போராட்டம் தீவிரம் பெற்ற பத்து வருடங்களை வரையறை செய்தும், அக்காலப்பகுதியில் தோன்றிய இனமுரண்பாடு மற்றும் அதன் விளைவுகளைப் பேசுபொருளாகக் கொண்டு படைக்கப்பட்ட ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்டும் இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.*

*3.* ***இலக்கிய மீளாய்வு***

*'இலக்கிய மீளாய்வு' என்பது இந்த ஆய்வுத் தலைப்புடன் தொடர்பான விடயங்கள் தொடர்பில் எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள் முதலியவற்றை வாசித்து அவற்றின் நிறை குறைகளை இனங்கண்டு கொள்வதோடு, அவற்றில் கூறப்படாத விடயங்களை இனங்கண்டு, அதாவது ஆய்வின் இடைவெளியை இனங்கண்டு அதனை இந்த ஆய்வின் மூலமாக நிரப்புவதற்கான முயற்சியாகும். இந்தவகையில், அ.யேசுராசா, தெல்லிப்பளைக் கலை இலக்கியக்களத்தில் 'ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளும் தேசிய இனப்பிரச்சினையும்' என்ற தலைப்பில் 1988 இல் கட்டுரை ஒன்றை வாசித்தார். பின்னர் இக்கட்டுரை 1989இல் திசையின் இரு இதழ்களில் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்பட்டது. இக்கட்டுரையில் 1950களிற்குப் பின்னைய ஈழத்துத்*

*தமிழ்ச்சிறுகதைகளை மையப்படுத்தி இனமுரண்பாடுசார் பிரச்சினைகளும் அவற்றின் விளைவுகளும் ஆராயப்பட்டுள்ளன.*

*ச.முருகானந்தன், 'தேசிய இனப்பிரச்சினையில் ஈழத்துச் சிறுகதைகளின் தாக்கம்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை ஒன்று 1989இல் 'மல்லிகை' எனும் இதழில் பிரசுரிக்கப்பட்டது. அதில் தேசிய இனப்பிரச்சினைகளின் பிரதிபலிப்புக்கள் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளன.*

*செல்லையா திருநாவுக்கரசு, 'ஈழத்துத்தமிழ் இலக்கியத்தில் தேசிய இனங்களுக்கு இடையேயுள்ள பிரச்சினைகளின் பிரதிபலிப்பு (1947 - 1989)' என்ற தலைப்பில் 1992 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப்பட்டத்திற்கான ஆய்வினைச் சமர்ப்பித்திருந்தார். அவர் ஈழத்தில் 1947 - 1989 வரையான காலகட்டத்தில் வெளியான ஈழத்துத்தமிழ் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வினைச் செய்திருந்தார்.*

*க.குணராசா, 'ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வரலாறு' எனும் நூலை 2001ஆம் ஆண்டு வெளியிட்டிருந்தார். அந்நூலில் ஐந்தாவது அத்தியாயமாக 'ஈழத்துச் சிறுகதைகள் தமிழ்த்தேசியவுணர்வுக்காலம் (1983 - 2000)' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையைப் பதிவு செய்துள்ளார். அக்கட்டுரை, தமிழ்த்தேசியவுணர்க்கால ஈழத்துச்சிறுகதை வரலாற்றுப் போர்க்காலச்சூழல் மற்றும் நவீன இலக்கியப் போக்குகள் குறித்தும் ஆராய்கிறது.*

*ம.இரகுநாதன். 'முற்போக்கு இயக்கமும் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளும்' எனும் நூலினை 2013 ஆம் ஆண்டு வெளியிட்டிருந்தார். அந்நூலின் மூன்றாவது அத்தியாயத்தில் 'கணேசலிங்கனின் சிறுகதைகள்' என்ற தலைப்பில் 'இனமுரண்பாடு' எனும் உதிரிக் கட்டுரையைப் பதிவு செய்துள்ளார். இவ்வுதிரிக் கட்டுரை கணேசலிங்கனது சிறுகதைகளில் இனமுரண்பாட்டின் பிரதிபலிப்பினை ஆராய்கிறது. குறிப்பாக வேற்று இனக்காதலர்கள் இணைந்து வாழ, இனரீதியான முரண்பாடுகளே தடையாகவுள்ளமையைக் காட்டுகின்றது.*

## *4.* **ஆய்வின் தேவை**

*இலக்கிய மீளாய்வுகளை நோக்கும் போது, 1980 - 1990 கள் வரையான காலத்தில் தோன்றிய ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளை மையப்படுத்தி, ஈழத்தில் நிலவிய இனமுரண்பாடு தெளிவாகவும், துல்லியமாகவும், விரிவாகவும் ஆராயப்படவில்லை. பரந்துபட்ட கால எல்லைகளை வரையறுத்தும் மேலோட்டமான பார்வையிலும் இனமுரண்பாடுசார் பிரச்சினைகள் ஆராயப்பட்டுள்ளன. ஆகவே 1980 - 1990கள் வரையான காலகட்ட ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்டு, அச்சிறுகதைகளில் பிரதிபலிக்கும் இனமுரண்பாட்டினைத் துல்லியமாகவும், ஆழமாகவும் ஆராய வேண்டிய தேவை உள்ளது.*

## *5.* **ஆய்வு நோக்கங்கள்***;*

- ***1980 - 1990*** *கள் வரையான காலகட்ட ஈழத்துத் தமிழ்ச்சிறுகதைகளில் இனமுரண்பாடு வெளிப்படுத்தப்பட்டுள்ள வகையினை அறிதல்.*

- *இனமுரண்பாடு அக்காலச் சமூக, அரசியல், பொருளாதார நடைமுறைகளிலும், மனித சிந்தனைகள் மற்றும் வாழ்வியல் போக்குகளிலும் ஏற்படுத்திய பாதிப்புக்களை அறிதல்.*

- *இக்காலச் சிறுகதைகளை மையப்படுத்தி, இன முரண்பாட்டிற்கான காரணங்களையும், அவை இனங்களுக்கிடையிலான பகைமைத்தன்மையாக வளர்ந்த விதத்தினையும் அறிதல் என்பன இவ்வாய்வின் நோக்கங்களாகின்றன.*

*6.* ***ஆய்வின் ஆதாரங்கள்***

*இவ் ஆய்விற்காகப் பயன்படுத்தப்பட்ட முதன்மை ஆதாரத் தரவுகளாக, 1980 - 1990கள் வரையான காலகட்டத்து இனமுரண்பாடு மற்றும் போர்க்கால வரலாறு பேசும் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள் அமைகின்றன. துணை ஆதாரத்தரவுகளாக இன முரண்பாடுகள் சார் அரசியல் - வரலாற்று நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், ஆய்வேடுகள், கட்டுரைகள் என்பன இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்படுகின்றன.*

*7.* ***ஆய்வு முறையியல்***

*இவ் ஆய்வு விபரண முறையில் ஆய்வு செய்யப்படுகின்றது. பகுப்பாய்வு அணுகுமுறையின் அடிப்படையில் 1980 - 1990 கள் காலகட்ட ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள் பகுப்பாய்விற்கு உட்படுத்தல்பட்டுள்ளன. விளக்கி உரைத்தல் செயன்முறையின் அடிப்படையில் 1980 - 1990 கள் காலகட்ட ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் அடையாளப்படுத்தப்பட்ட இன முரண்பாட்டுத் தகவல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

*8.* ***கலந்துரையாடல்***

***தமிழ்மொழிப் புறக்கணிப்பு***

***1980 – 1990**கள் வரையான காலப்பகுதிகளில் தோன்றிய இன, மத, உணர்வு அடிப்படையிலான ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் குறிப்பிடத்தக்க அளவானவை, இலங்கையில் கொண்டுவரப்பட்ட 'சிங்களம் மட்டும்' போன்ற சட்டங்களை எதிர்த்து உருவான தமிழர் மொழியுரிமைப் போராட்டங்களையும், இனவன்முறைகளுக்கு எதிரான தமிழரின் நிலைப்பாடுகளையும் பொருளாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளன. சாந்தன் எழுதிய 'கிருஷ்ணன் தூது' (1981) காவலூர்.எஸ்.ஜெகநாதன் எழுதிய 'என்றுதான் இவர்கள் மனிதர்களாகி' (மல்லிகை, யூலை, 1982) 1982 ஆம் ஆண்டு எழுதப்பட்ட செ.யோகநாதனின் 'உறை' என்ற சிறுகதையும் மொழிப்பிரச்சினை சார்ந்தே அமைந்துள்ளது. அழகான வண்ணப்படங்கள் உள்ள, ஆனால் சிங்களத்தில் எழுத்துக்கள் அச்சடிக்கப்பட்ட கடதாசியினால் தனது புத்தகங்களிற்கு உறைபோட ஒரு பதின்மூன்று வயதுச் சிறுவன் மறுக்கிறான். அவன் தகப்பனிடம்,'ஒரு இடத்திலை கூட தமிழிலை விளக்கமில்லை... இதெல்லாம் அரசாங்க அச்சகத்திலைதான் அச்சடிக்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு எழுத்துக்கூடத் தமிழிலை இல்லை' என்று கூறுகிறான். இதன்மூலம் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்ட நிலையைக் காட்டுகின்றார்இவ்வாறு தமிழ்மொழியின் புறக்கணிப்பால் தமிழ்மக்கள் அனுபவித்த முரண்பாட்டுச் சிக்கல்களை இச்சிறுகதைகள் வெளிப்படுத்தியுள்ளன.(சதீஸ்.மு, 2022: ப.33).*

***பிரஜாவுரிமை***

*பிரஜாவுரிமைப் பிரச்சினை மலையகத் தமிழ் பேசும் மக்களைக் களமாகக் கொண்டது. 1980 இல் மாத்தளை எழுத்தாளர் ஒன்றியம் வெளியிட்ட சிறுகதைத் தொகுதியான 'தோட்டக்காட்டினிலே',*


ISBN: 978-624-5736-55-3

*1989 இல் மலரன்பனின் கதைகளின் தொகுப்பாகச் சுஜாதா பிரசுரம் வெளியிட்ட 'கோடிச்சேலை' முதலியனவும் மலைநாட்டு மக்களது அகப்புறப் பிரச்சினைகளைக் காட்டுகின்றன. மாத்தளைச் சோமுவின் 'நமக்கென்றொரு பூமி'(1982) எனும் சிறுகதை, மலையகத் தமிழர்களுக்குப் 'பிரஜாவுரிமை' கிடைக்காததால் அவர்களுக்கென்று சொந்தநிலம் இல்லாமல், இறந்த உடலைப் புதைக்கக் காணியில்லாத நிலையில் அவர்கள் படும் அவலங்களைக் காட்டுகின்றது.*

*'தேயிலைத் தூருக்கே ஒழைச்சி ஓடாகிப்போன கெழவிக்கு இதே தேயிலைத் தோட்டத்தில் பொதைக்கக் காணி இல்லியாமே. இது அநியாயமுங்க... என்னைக்கி இந்தியாவில இருந்து வெள்ளைக்காரனை நம்பித் தேயிலைத் தூரில மாசி பொறுக்க வந்தோமோ அன்னையில இருந்து இதே பிரச்சினைதான். இன்னும் முடிவில்ல..' (ப.208).*

*'நாங்க ஒழைச்சி ஓடாக வேண்டியதுதான்... பொதைக்கக் கூட சொந்தக்காணி இல்ல... அதைக் கூடக் கேட்டுத்தான் பொதைக்கணும்!' (ப.209).*

*எனச் சொந்தக்காணியில்லாத நிலை இக்கதையில் காட்டப்படுகின்றது. சே.சிவராசா எழுதிய 'ஊர் உறங்கும் வேளையிலே' என்ற சிறுகதை 22.08.1987 இல் சஞ்சீவி இதழில் வெளிவந்தது. ஹற்றன் வனராஜாத் தோட்டத்தைச் சேர்ந்த மாரிமுத்து – மாரியாயி தம்பதியினர், சந்ததி சந்ததியாக வாழ்ந்த எம்மவருக்கு உரிமையில்லை, ஓட்டும் இல்லை, எல்லாவற்றிற்கும் மேலாகப் பாதுகாப்புமில்லை என்ற எண்ணத்தில் இந்தியாவிற்குத் தமது குடும்பத்தோடு செல்லத் திட்டமிடுகின்றனர். அவர்களது முந்தைய தலைமுறைக்கு மாறுபட்ட இளைஞனான கணேசுவிற்கு இந்த எண்ணம் திருப்தியளிக்கவில்லை. தாய் தந்தையுடன் ஏற்பட்ட விவாதத்தின் முடிவில் அவன் ஓர் முடிவை எடுத்துக் கொண்டான். அதுதான் வடக்கே போவது. அதாவது வடக்கே உரிமைகளுக்காகப் போராடும் போராளிகளுடன் இணைந்து கொள்ளக் கணேசு புறப்பட்டு விட்டதாகக் கதையை நிறைவு செய்துள்ளார் ஆசிரியர். புதிய தலைமுறையினர் பெற்றுவரும் விழிப்புணர்வும், எப்படியாவது இழந்த தங்களது உரிமைகளைப் பெற்றுவிட வேண்டுமென்ற ஆதங்கமும் இச்சிறுகதையினூடாக இயல்பாக வெளிப்படுத்தப்படுகின்றது.*

*அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் 'மொட்டுக்கள் மலர்கின்றன' என்னும் சிறுகதையானது 27.08.1989 இல் ஈழநாடுப்பிரசுரத்தில் வெளிவந்திருந்தது. இக்கதை, நுவரெலியாவில் பட்டதாரி ஆசிரியராகப் பதவியேற்ற யாழ்ப்பாணத்துச் சிவசூரியருக்கும், அதே பாடசாலையில் தொண்டராசிரியையாகப் படிப்பிக்கும் மலையகத்தமிழ்ப்பெண்ணான கௌரிக்கும் இடையிலுருவான காதலைப் பற்றியதாகும்.*

*'எனக்குப் பிரஜாவுரிமை கூட இல்லைங்க, நான் இந்த நாட்டில் உரிமையில்லாதவள். பிரஜா உரிமை இல்லாத தமிழர் லட்சக்கணக்கிலை இருக்கினம் இலங்கேலை. நான் நாடற்றவள். ஒரு நாள் நிச்சயமாக நாடுகடத்தப்படப் போறவங்க'*

*இத்தகைய சூழ்நிலையில் காதலுக்கு இடையூறாயிருந்த பிரஜாவுரிமைப் பிரச்சினை, நாடற்ற சகலருக்கும் பிரஜாவுரிமை வழங்கச் சட்டச் செய்தி வானொலியில் ஒலிபரப்பப்பட்டதால் தீர்ந்து விடுவதாக ஆசிரியர் கதையை முடிக்கின்றார். எனவே பிரஜாவுரிமைச் சட்டங்களும், அதன் பின்னர் தோட்டமக்கள் அனுபவித்த துயரங்களும், அரசினதும், பெரும்பான்மை*


ISBN: 978-624-5736-55-3

*இனத்தவர்களினதும் நடைமுறைகளும் இச்சிறுகதைகளினூடாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. (சதீஸ்.மு, 2022: பக்.34 - 39).*

**திட்டமிட்ட குடியேற்றம்**

*ச.முருகானந்தன் எழுதிய 'ஒருகிராமத்தின் கதை' (மல்லிகை, மார்ச், 1984) முக்கியமானதாகும். முல்லைத்தீவுக்கடற்கரையோர மீன்பிடிக்கிராமம் ஒன்றில் நிகழும் கதை இது. உள்ளூர் மீனவர்களின் மீன்பிடியைக் கெடுக்கும் விதமாகத் தென்பகுதிச் சிங்கள மீனவர்களின் வருகை அமைவதும், புதிய மீன்பிடிக் குடியேற்றத்தைத் தொடர்ந்து அவர்களின் வழிபாட்டிற்கமைவாகப் புதிய விகாரை அமைத்தலும், தமிழர் - சிங்களவர்களுக்கு இடையேயான கலவரங்களில் உள்ளூர் தமிழ் மக்களின் குடிசைகளை எரித்தலும், புதிதாக அமைத்த மாதிரிக் கிராம வீடுகளில் தென்பகுதிச் சிங்களவர்களின் அத்துமீறிய குடியேற்றத்தைக் கண்டு அசமந்தப் போக்காக இருக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளும் இச்சிறுகதையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் ஆதரவோடு தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் மெல்லமெல்ல நிகழுவதனையும் இக்கதை காட்டுகின்றது. ச.முருகானந்தனின் மேலுமொரு கதையாக 'குரூரம்' (தாயகம், ஒக்ரோபர், 1986) எனும் சிறுகதையானது, கிழக்கும் - வடக்கும் இணையும் எல்லையில் உள்ள ஒதியமலைப்பிரதேசத்தினைக் களமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.*

*'நாட்டில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார மாற்றங்கள் சிறுபான்மை மங்களை நலிவடையச் செய்தன. அவர்களுடைய கிராமத்தில் அத்துமீறிய வெளியார் குடியேற்றங்கள் திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட்டன. வைரவர் கோயில் அரச மரத்தருகே விகாரை ஒன்று அமைக்கப்பட்டது. சிறு..சிறு..பூசல்கள்... மோதல்கள் ஒருநாள் ஆயுதபாணிகளாக வந்தவர்கள் சோதனை என்ற பெயரில் புரிந்த அராஜகத்தினால் தமிழர் குடிமனைகள் தீக்கிரையாகின. மருதநாயகத்தின் தாயார் குடிசையோடு கருகினாள். எஞ்சியிருந்தவர்கள் காடு, மேடு என்று ஓடி அகதிகளாக வெளியேறினர்.' (ப.37)*

*இவ்வாறு சிங்களக் குடியேற்றம் விளைவித்த கொடுமைகள் இச்சிறுகதையில் சிறப்பிடம் பெறுகின்றன. வீரகேசரியில் 23.04.1989 இல் தங்கனின் 'மண்ணாசை' என்ற சிறுகதை வெளியாகியது. அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்கள், சிங்களக் குடியேற்றங்களினால் அடையும் இன்னல்களை எடுத்துக்காட்டுவதாக இக்கதை அமைந்துள்ளது. தீகவாவிப் புனிதநகர்த் திட்டத்தினால் மல்வத்தையில் இருந்து பொத்துவில் வரையான தமிழ்பேசும் மக்களது பரம்பரை விளைநிலங்கள் அபகரிக்கப்பட்டன. அத்தகைய சூழ்நிலையில் தனது வாழ்விற்கு வழிகாட்டிய பரம்பரைப் பூமியைப் பறிகொடுத்த 'மீராசாய்பு' என்ற கதாபாத்திரத்தினைச் சுற்றியே கதைபடர்கிறது. 'பரம்பரைச் சொத்து, சந்ததி சந்ததியாகக் கட்டிக்காத்த காணி, பாடுபட்டநிலம், பசிதீர்த்த பூமி, நம்பியிருந்த நிலம், மண்ணில் பொன்விளையற பூமித்தாய் அதில ஆசை இரிக்காதா?' இவ்வாறு மண்ணின் மீது மீராசாய்பு கொண்ட மாறாத பற்று எடுத்துக்காட்டப்படுகின்றது. தமது பரம்பரை வேளாண் நிலத்தைப் பறி கொடுத்த ஏக்கத்தினால் மீராசாய்பு நோயாளியாகிவிடுகின்றார். அவரது மண்ணாசையைத் தெரிந்து கொண்டு மரணத்தறுவாயிலிருக்கும் அவருக்குக் 'களவெட்டி' மண்கரைத்துப் பருக்கப்படுகிறது. ஆக்கிரமிப்புக்களினால் அவரது நிலத்து மண்ணைப் பெற முடியாத சூழ்நிலையில் செய்த மாற்று*

*வேலையைத் தனது இறுதிக்கட்டத்திலும் அவரால் உணர முடிகின்றது. மரண அமைதியினிடையேயும் தன் சொந்த மண்ணில்லாத பிறிதொரு நிலத்து மண்ணைத் துப்பிவிட்டு மரணிக்கிறார் மீராசாய்பு. நிலப்பறிப்புக் கொள்கையினால் அவஸ்தைக்குள்ளான மனிதவுணர்வுகளை இச்சிறுகதை எமக்கு வெளிப்படுத்தி நிற்கிறது.*

**தரப்படுத்தல்**

*செ.யோகநாதன் 1983 இல் எழுதிய சிறுகதையே 'பொய்மையின் நிழலில்'. இச்சிறுகதையில் பல்கலைக்கழகத் தரப்படுத்தலில் தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைக் காட்டியுள்ளார். எஸ்.அகஸ்தியர் எழுதிய 'பிறழ்வு' (அமிர்த கங்கை, 1986) எனும் சிறுகதை, தரப்படுத்தலினால் தமிழ்மாணவர்கள் அடைந்த விரக்தியினை யாழ்ப்பாணத்துப் பின்னணியில் கூறுகின்றது. க.பாலசுந்தரம் எழுதிய சிறுகதைத் தொகுதியான 'அந்நிய விருந்தாளி' 1986 இல் வெளிவந்தது. இதில் இடம்பெற்ற 'முட்டைப் பொரியலும் முழங்கையும்' என்ற சிறுகதை தமிழ் மாணவர்களின் கல்விப் பிரச்சினைகளைக் கூறுவதாய் உள்ளது. மண்டை தீவுக் கலைச் செல்வியின் 'அம்மா' எனும் சிறுகதை 13.04.1986 இல் ஈழமுரசுப்பத்திரிகையில் வெளிவந்தது. இனப் போராட்டத்தினையும் - தரப்படுத்தலையும் இணைக்கும் சிறுகதைப்படைப்பாகக் காணப்படுகின்றது. 19வயது மகனைப் பற்றிய அம்மாவின் நினைவாகக் கதை விரிகின்றது. மகனைப் படிக்க வைப்பதற்காக அவனை வேலை செய்யவிடாது, தான் வேலை பார்த்துக் கொடுத்த அம்மா, தன் மகன் பாடுபட்டுப் படித்தும் மேற்படிப்பு படிக்கவியலாமை கண்டு மனம் வெதும்புகிறார்.*

*'பாஸ் பண்ணினான் தான் ஆனா... இரண்டே இரண்டு மாக்ஸ் குறைவாம். கண்டறியாத தரப்படுத்தலாம். எல்லாம் உவங்களின்ரை ஒரே வஞ்சகம் தான்'*

*என விரக்தியுடன் பதிலளித்த மகன் இயக்கத்தில் இணைந்து விடுகின்றான். தரப்படுத்தலால் ஏற்பட்ட விரக்தியும் வெறுப்புமே, தமிழ் மாணவர்களைப் போராளி இயக்கங்களில் ஈடுபட வைத்தன என்ற கருத்தினை இச்சிறுகதை மூலம் கலைச்செல்வி முன்வைத்துள்ளார். டானியல் அன்ரனியின் 'வெற்றுக்காகிதங்கள்' எனும் சிறுகதை 1987 ஆம் ஆண்டு 'வலை'எனும் சிறுகதைத் தொகுப்பில் வெளிவந்திருந்தது. இதில், இலங்கை அரசின் இன ஒடுக்குமுறைச் செயல்களில் ஒன்றாகிய 'தரப்படுத்தல்' பிரச்சினையைக் கண்டித்துத் துண்டுப்பிரசுரம் ஒட்டிய இளைஞனை இராணுவத்தினர் பிடித்துக் கொண்டு போவதனைக் காட்டுகின்றார். அப்போது இராணுவத்தினரின் வன்செயல்களும் வெளிப்படுத்தப்படுகின்றன.*

*'முதலாளித்துவக் கல்விமுறை முற்றாக ஒழிய வேண்டும்... வெற்றுக் காகிதங்கள் வேலை தருமா?... தரப்படுத்துதல், இன ஒடுக்குதல்' (பக்.106)*

*'தெற்குத் தெருவில் உறுமிக் கொண்டுவந்த ஜீப் ஒன்று படலைக்கு முன் 'சடின்பிறேக்' குடன் நின்றது. 'தாம்தீம்' என்று பூட்ஸ் கால்கள் நிலத்தில் குதித்தன...போஸ்ட் ஒட்டுறது?வடுவா றாஸ்கல்! செம்மையாகச் சாத்தினால்தான் திருந்துவீர்கள்'*

*என்பவற்றின் மூலம் தமிழ் இளைஞர்களின் வேலையில்லாப் பிரச்சினையும், பல்கலைக்கழகத் தரப்படுத்தல் பிரச்சினையும், அரசுக்கெதிரான தமிழ் இளைஞர்களின் போராட்டத்தினையும் கதையாசிரியர் காட்டுகின்றார்.*

**இனக்கலவரங்கள்**

*இலங்கையின் சுதந்திரத்தின் பின் 1956 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தனிச்சிங்களச் சட்டமும் அதன் தொடர்ச்சியாக இடம்பெற்ற அரசின் செயற்பாடுகளும் அரசுக்கெதிரான தமிழர்களின் போராட்டங்களை வலுப்பெறச் செய்தன. இதனால் சிங்கள இனவெறிக் காடையர்களால் தமிழர் தாயகப் பகுதிகளில் கலவரங்கள் மேற்கொள்ளப்பட்டன. 1958, 1978, 1981, 1983 எனத் தொடர்ச்சியாக இடம்பெற்ற இனக்கலவரங்களினால் தமிழர்கள் பெரும் அவலங்களை அனுபவித்தனர். இத்தகைய கலவரச் சூழல்களை 1980 – 1990 கள் வரையான காலகட்டத்தில் தோன்றிய தமிழ்ச்சிறுகதைகளில் மிகத்தெளிவாக அவதானிக்க முடிகின்றது.*

*கோவிந்தராஜ் எழுதிய 'மொய்க்காசு' (1982) எனும் சிறுகதையில் இனக்கலவர காலத்தில் புகையிரதங்களில் பயணித்த தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட செய்தி கூறப்படுகின்றது.*

*'யாழ்தேவி பயங்கர இரைச்சலுடன் மதவாச்சியைத்தாண்டி அனுராதபுரத்தை அடைந்தாள். நாற்பது ஐம்பது பேர் கொண்ட பட்டாளம்.. பயங்கரமான முறையில் தமிழர்கள் தாக்கப்பட்டனர்..'*

*'ராசுக்கண்ணுவின் காதை ஒருவன் பிடித்தான் 'அடே கணவிதிலா... தெமலு..' (காது குத்தியிருக்கான் தமிழன்) என்று சொன்னதுதான் தாமதம் தாறுமாறாக வெட்டுக்கள். அவனால் பேசமுடியவில்லை. நினைவிழந்து கீழே சரிந்தான்...' (ப.282).*

*இவ்வாறான கொடுமைகள் சிங்களப் பேரினவாதிகளால் இழைக்கப்பட்டமையை இச்சிறுகதை மூலம் ஆசிரியர் வெளிப்படுத்துகின்றார். ஆனந்தராகவன் எழுதிய 'நண்பனே! என்றும் உன் நினைவாக...' (1982) எனும் சிறுகதையும் மலையக மக்கள் தமது தோட்டப் பகுதிகளில் சிங்கள இனவெறியர்களால் தாக்கப்பட்டமைக் காட்டுகின்றது.*

*'மாஸ்டர்! நீங்கள் அக்காவையும், நளினியையும் கூட்டிக் கொண்டு பின்கதவால் வெளிக்கிட்டுப் போங்கோ. வயிற்றிலை பிள்ளையோட வேற நிக்கிறா பொம்பிளைகள் என்றால் இந்த வெறியன்கள் விடமாட்டான்கள்' (ப.297).*

*'ஓடைக்கு அப்பால் இருக்கும் பாறையில் யாரோ படுத்திருப்பது தெரிகிறது... அவனது கைகள் இரண்டும் வெட்டப்பட்டுப் பக்கத்தில் கிடக்கின்றன. ஒரு கண் பாதி வெளியில் வந்த நிலையில் வெடுத்து நிற்கிறது. உடல் முழுவதும் குத்திக் குதறிய நிலையில்..' (ப.299).*

*என்பவற்றின் மூலம் சிங்களக்காடையர்கள் கண்மூடித்தனமாகத் தமிழர்களைக் கொன்ற செய்தியைக் காட்டுகின்றார் ஆசிரியர். கோகிலா மகேந்திரனின் 'பரிகாரம் தேடும் பரிதாபங்கள்' எனும் சிறுகதை இனக்கலவரத்தின் போது கணவனைப் பறிகொடுத்து நான்கு வயதுப் பாலகனுடன் அகதியாகக் கப்பலில் யாழ்ப்பாணம் திரும்பிய பெண் ஒருத்தியின் பரிதாபங்களைக் கூறும் கதைதான் இது.*

*'அவர் கலவரத்தில் இறந்து போய்விட்ட உண்மையைக் கூட.... அது நடந்து நாலு மாதங்கள் முடிந்து போய்விட்ட பின்னரும் இன்னும் என் மகனுக்குச் சொல்லிக் கொள்ள முடியாமல் தவிக்கிறேன்' (ப.95).*

*'காடையர்கள் வந்தவுடன் நாங்கள் மூன்று பேரும் ஓடியது.. வீட்டில் இருந்த பெறுமதியான பொருட்களையும், நகைகளையும் மீட்டு வரலாமென்று இவர் ஒரு வெள்ளிக்கிழமை காலை*

*திரும்பி வீட்டுக்குப் போனது.. அன்று மாலை வரை திரும்பி வராதது.. என் கணவரின் சடலத்தைக் கூடப் பார்க்க முடியாமல் போனது.. அன்று முதல் இன்று வரை..' (பக்.96–97).*

*'இதி விதியில்லை சரி! இனப்பெருக்க காலத்திலை இருக்கிற பொம்பிளையளை விதவையாக்கிறது ஒரு இனத்தையே அழிக்கிற திட்டம்' (ப.99).*

*இத்தகைய கருத்துக்கள் கதையில் பேசப்படுகின்றமை, தமிழர் தாயகப் பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான பெண்கள் விதவைகளாக, கணவன் காணாமல் போன அவலங்களோடு வாழ்வதைக் காட்டுகின்றன. இவை கலவர காலங்களில் நடந்த விடயங்களாகக் கோகிலா மகேந்திரன் தன் சிறுகதையில் காட்டுகின்றார். தையிட்டி இராசதுரையின் 'அகதி மண்' (முரசொலி, 13.09.1987) நாகேசு தர்மலிங்கத்தின் 'அன்னியம்' (மல்லிகை, ஏப்ரல், 1986), சாந்தகௌரி முத்துச்சாமியின் 'வடிவின் பாதையில்' (ஈழமுரசு, 06.04.1986), டொமினிக் ஜீவாவின் 'பேப்பர் பிரசவம்' (மல்லிகை, ஆகஸ்ட், 1986), வளவை வளவனின் 'நான் வரமாட்டேன்' (ஈழநாடு, 22.09.1985), ஆ.இரத்தின வேலோனின் 'ஒரு விடியலுக்கு முன்' (வீரகேசரி, 18.12.1988), மருதனார் மடம் சி.கதிர்காமநாதனின் 'தாய்' (ஈழநாடு, 23.03.1986) முதலிய சிறுகதைகள் இன ஒடுக்கு முறைகளுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளின் வடிவங்களுக்கே களம் அமைத்துள்ளன. ஏதோ ஒரு விதத்தில் இன அடக்கு முறைக் குரூரங்களின் தாக்கங்கள் இவற்றில் புலனாகின்றன.*

**இலங்கை இராணுவத்தின் வன்முறைகள்**

*செ.கணேசலிங்கனின் 'ஒருதாயின் குரல்' (1983) எனும் சிறுகதை சிங்கள இராணுவத்தினரின் கெடுபிடிகளையும், ஒடுக்குமுறைகளையும் வெளிப்படுத்துகின்றது.*

*'வவுனியாவில் வண்டி நின்றதும் வண்டியின் இருபுறமாகவும் ஐம்பது அறுபது இராணுவத்தினர் வந்து சூழ்ந்து கொண்டனர். இறங்குபவர் ஒவ்வொருவரையும் நோட்டம் போட்டு வெளியே அனுப்பினர். பின்னர் வண்டி புறப்பட்டது. அவர்கள் ஏறிக் கொண்டனர். கதவுப்பக்கமாகச் சுழல் துப்பாக்கிகளுடன் ஒவ்வொரு பெட்டியிலும் காவல் புரிந்தனர். சில ராணுவத்தினர் பொதிகளையும் இளைஞர்களையும் அதட்டும் குரலுடன் சரிபார்த்துக் கொண்டு வந்தனர்'. (ப.77).*

*எனச் சிங்கள இராணுவத்தினரின் கெடுபிடிகளையும், அடக்கு முறைகளையும் செ.கணேசலிங்கன் தன் சிறுகதையில் காட்டியுள்ளார். சொக்கன் எழுதிய மைத்திரி' (தாயகம், யூன், 1986) எனும் சிறுகதை ஈழப் போராட்ட காலத்தினையும், இராணுவ ஒடுக்குமுறைகளையும் வெளிக்காட்டுகின்றது. குருநாகலில் வாழும் 'புஞ்சிபண்டா' என்பவன் இலங்கை இராணுவத்தில், குடும்ப வறுமை காரணமாக இணைந்து கொள்கிறான். பின்னர் 1983 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பலாலி விமானப்படை முகாமிற்கு அனுப்பிவைக்கப்படுகின்றான். அவனுடைய பின்னணியில் கதை நகர்வதுடன், சக இராணுவ விரர்களின் இனவன்முறைச் செயல்கள் தர்மத்திற்குப் புறம்பானவை என அவனுடைய பார்வையினூடாகக் காட்டப்படுகின்றன.*

*'ஒருவாறு பலாலி ராணுவ முகாமையும் வந்து சேர்ந்தாயிற்று. இரவு போனது.. பகல் வந்தது.. பகல்போய் இரவு வந்தது... மாறி மாறி... ஒவ்வொரு நாளும் எத்தனை சம்பவங்கள்... எத்தனை கொடிய சாவுகள்...'*

*'பெண்கள், சிறுவர்கள், சிறுமிகள், குழந்தைகள், முதியவர்கள் என்று அப்பாவிப் பொதுமக்களும் அடிக்கடி இரையாவதுண்டு... இடையிடையே போராளிகளின் கண்ணி வெடிகளுக்குப் படைவீரர்களும், வாகனங்களும் இரையாவதும் சகஜமாயிருந்தது...' (ப.30).*

*'படைவீரன் ஒவ்வொருவனினதும் முகத்திலும் பயங்கர வெறித்தனமே நர்த்தனமாடியது. இந்தத் தமிழ் வேசி மக்களைத் தொலைக்க வேணும். ஒருத்தனையும் மிச்சம் மீதி வைக்கக் கூடாது...இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் கொலை, கொள்ளை, தீவைப்பு, கற்பழிப்பு சித்திரவதை என்று ஒரே பயங்கரம்.. '(பக்.31 - 32).*

*இவ்வாறு 1983 ஆம் ஆண்டுக் கலவரத்தின் பின்னணியைக் கன்முன்னே காட்டுகிறார் ஆசிரியர். தெணியானின் 'வந்தி' (மல்லிகை, யூன், 1986) எனும் சிறுகதை, இராணுவ நடவடிக்கைகளின் பயங்கரமான சூழ்நிலைகளில், தனக்கு வரும் ஆபத்தைப் பொருட்படுத்தாமல் 'பொடியன்' களுக்காக, அவர்களின் பசியைத் தீர்ப்பதற்காகப் பிட்டுக் கொண்டு போகும் கிழவி ஒருத்தியின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் கதையாகக் காணப்படுகின்றது. ச.முருகானந்தனின் 'தரை மீன்கள்' (மல்லிகை, ஆகஸ், 1986) எனும் சிறுகதை, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், பாதுகாப்புவலயச் சட்டம் ஆகியவற்றின் நெருக்கடியின் கீழே யாழ்ப்பாணத்து மீனவக் குடும்பமொன்று அனுபவித்த வறுமை நிலையைக் காட்டுகின்றது. அந்தோனி – மேரி – பிள்ளைகளின் துன்பியல் நிலை அங்கு வர்ணிக்கப்படுகின்றது. தொழிலுக்குப்போன 35 பேர்வரை கடற்படையினரால் கொல்லப்பட்ட சம்பவமும் இதில் இணைக்கப்பட்டுள்ளது. செங்கை ஆழியான் எழுதிய 'ஷெல்லும் ஏழு இஞ்சிச் சன்னங்களும்' (மல்லிகை, யூலை, 1986) எனும் சிறுகதை, வவுனியாவின் குடியிருப்புப் பகுதியில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குத் தந்தை பலியாகத், தாய் காயமடைய, ஆதரவு அற்ற 12 வயது சிறுவன் வியாபாரம் செய்யும் நோக்கத்துடன் உடைந்த ஷெல் துண்டுகளைப் பொறுக்குவதாக அமைந்த கதையாகும்.*

*ரஞ்சகுமாரின் 'கபரக்கொய்யாக்கள்' (1989) எனும் சிறுகதை 'மன்னம்பரி' எனும் சிங்களப் பெண்பற்றியது. அவளை இலங்கை இராணுவம் சீரழிவுக்கு உட்படுத்திச் சித்திரவதை செய்த சம்பவத்தினைக் கதையாக்கி உள்ளார் ரஞ்சகுமார். இதில் இலங்கை இராணுவத்தினைக் - கபரக்கொய்யாக்கள் ஆகக் குறியீட்டுத்தன்மையில் காட்டுகின்றார்.*

*'சிறு தொலைவில் ஏதோ உறுமியது. பதில் சொல்வது போல இன்னுமொன்று உறுமி உறுமி நெருங்கி வருவன போல... அரைத்தூக்கத்தில் உழன்று புரன்கின்ற போது எரிச்சல் மிகக் கொள்ளும்படி கதவில் 'படீர்' என வாலைத் தூக்கிச் சுழற்றி ஒரு சாத்துச் சாத்தும் கபரக் கொய்யாக்கள் போல்...'(ப.12).*

*'முரட்டுப் பூட்ஸுகள் தாம் தூமென பூமியில் தடமுழுது சென்றன. கூந்தலைப் பற்றி வலிந்து இழுத்தபடி சென்றனர்..'(ப.16).*

*'புயலில் உருக்குலைந்த ஒரு கொடி போனது, தொடைகளின் நடுவிலிருந்து குருதி பெய்தபடி...' (ப.16).*

*எனச்சிங்கள இராணுவத்தினரின் வன்செயல்களை அப்படியே காட்டியிருக்கின்றார் ரஞ்சகுமார். எனவே மேற்கூறிய கதைகளை நோக்கும் போது சிறுபான்மைத் தமிழர்களையும், தமக்கு எதிராகக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டவர்களையும் அடக்கி தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி மிகக்*

கொடுமையான வன்முறைகளையும், தாக்குதல்களையும் இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளமை தெளிவாகப் புலனாகின்றது. *(சதீஸ்.மு, 2022: பக்.55 - 60).*

**விமானத்தாக்குதல்கள்**

*சுதாராஜ் எழுதிய 'மீட்சி' (மல்லிகை, நவம்பர், 1986) முக்கியமான சிறுகதையாகும். விமானத்தாக்குதலின் கொடுமைகளைக் காட்டுகின்றார் சுதாராஜ். அருணாசலம் என்பவரின் வீடு விமானத்தாக்குதலில் எரிந்து தரைமட்டமாகிய செய்தியினூடாக அவரின் பொருளாதாரப் பிரச்சினையையும் தெளிவுபடுத்துகின்றார்.*

*'கொஞ்ச நாட்களுக்கு முன்னரும் நடந்தது. முதலில் சில நாட்கள் இருவிமானங்கள் வந்து வட்டமிட்டுச் சென்றன. பிறகு திடுதிப்பென்று வந்து குண்டுகளைப் பொழிந்து தள்ளின. அதுக்குத்தான்.. இப்பவும் அடுக்கெடுக்கிறாங்களோ?... இங்கினேக்கைதான் எங்கையோ போடப்போறான் போல கிடக்குது!'*

*'டும், டும்... படுங்கோ எல்லோரும் படுங்கோ!... அவருக்கு ஆறு பிள்ளைகள். மூத்தவனுக்கு பத்தொன்பது வயது நடக்கும் பொது, இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆமிக்காரர் வந்து பிடித்துக் கொண்டு போனவர்கள்.. போனது தான்!இன்னும் என்ன இடமென்றில்லை'*

*'இப்பொழுது அந்த வீடு இல்லை. கூரை தரையில் கிடக்கிறது. வீடு கட்டுவதற்கும் பட்ட கடன் தலைமேல் கிடக்கிறது.' (ப.82).*

*இவ்வாறு இலங்கை இராணுவத்தினரின் தாக்குதல்களையும் அவற்றின் அவலங்களையும் சுதாராஜ் இச்சிறுகதையில் பதிவு செய்துள்ளார். செங்கை ஆழியானின் 'விடியாத இரவும் ஒரு மனிதனும்;' (மல்லிகை, செப்டெம்பர், 1988) என்ற சிறுகதையும் முக்கியமானதாகும். உத்தியோகம் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து அறுபது மைல்களுக்கு அப்பால் தங்கியிருந்த தம்பிநாதன் என்பவர், தன்வீடுநோக்கிய பயணத்தில் அனுபவித்த துயரங்களையும், இறுதியில் யாழ்ப்பாணத்தை அடைந்த போது தன்வீடு தரைமட்டமாகியிருந்த சோகத்தினையும், மனைவி பிள்ளைகளின் கதியினை அறியாத நிலையில் தன்னுயிரைக் காப்பாற்ற ஓடி ஒளித்த அவலத்தையும் காட்டுகிறது.*

*'யாழ்ப்பாணத்தில் நிலைமை வலுமோசமாம். மூன்று நாட்களாக ஆறுகுண்டுவீச்சு விமானங்கள், இரண்டு கடல் விமானங்கள், மூன்று அவ்ரோ விமானங்கள், அவற்றுடன் ஒன்பது ஹெலிகொப்டர்கள் தாக்கி வருகின்றனவாம். ஒரு சின்னப் பிரதேசத்தை இவ்வளவு விமானங்கள் குண்டுகளால் தாக்குகிறது. நினைக்க முடியாதிருக்கிறது. அந்நிய நாட்டொன்றைத் தாக்குவது போலச் சுடுகாடாக்கும் முயற்சியில் இறங்கியிருக்கின்றான்கள். வடமராட்சிப் பக்கம் நிலைமை பயங்கரமாம். தம்பி, குண்டு துளைத்த உடல்கள் வீதியெற்கும் கிடக்கின்றனவாம். கட்டிடங்கள், வீடுகள், கோயில்கள் எல்லாம் சிதைக்கப்பட்டுள்ளனவாம். சுதுமலையில் கோயில் கொடியேற்றம் சனக் கூட்டத்தின் மீது விமானம் குண்டுவீசி ஏழுபேர் ஐவர் உட்பட உடல் சிதைந்து கொல்லப்பட்டார்கள். நூற்றுக்கணக்கானோர் படுகாயப்பட்டார்களாம். வன்னார்ப் பண்ணைச் சிவன் கோயில் குண்டுவீச்சால் தரைமட்டமாகிவிட்டதாம்.' (பக்.40 - 41).*

*என்று இராணுவத்தினரின் கண்மூடித்தனமான தாக்குதல்களால் தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்கள் தெளிவாகப் பேசப்பட்டுள்ளன. கோகிலா மகேந்திரன் எழுதிய 'மரணிப்பிலும்*

*உயிர்க்கும்' (மல்லிகை, 1990) எனும் சிறுகதையில், தமிழருக்கு எதிரான உலங்கு வானூர்தித் தாக்குதல்கள் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு வடகிழக்குப் பகுதிகளில் பரவலான முறையில் விமானத்தாக்குதல்கள் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டமையால் தமிழ் மக்கள் உயிரிழப்புக்கள் மட்டுமன்றி பல்வேறுபட்ட அவலங்களையும் அனுபவித்தனர்.*

***எறிகணைத்தாக்குதல்கள்***

*க.பாலசுந்தரம் எழுதிய 'ஸ்கூல் பிளஸ் மினிபஸ் ரைம்ரேபிள்கள்' (1986) எனும் சிறுகதை, இலங்கை இராணுவத்தினரால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தமான எறிகணைத் தாக்குதல்களைப் படம்பிடித்துக் காட்டுகின்றது.*

*'ஆமிக்காரன் சுன்னாகத்திலேயிருந்து சுட்டுக் கொண்டு பழம் பிள்ளையார் கோவிலடிக்கு வந்திட்டானாம்... தம்பி! தம்பி! ரவுனிலே என்ன நடந்தது?... மோட்டாரிலிருந்து வந்து விழுந்து வெடித்த ஷெல்லால், லிங்கம்ஸ் ரெக்ஸ்ரைல் கடைக்கு முன்னே கே.கே.எஸ் மினிபஸ்ஸில் வந்து இறங்கிக் கொண்டிருந்த பத்துப்பேர் ஸ்பொட்டிலே செத்துப் போச்சினம்' (ப.118).*

*என்பதன் மூலம் இராணுவத்தினரின் 'ஷெல்' தாக்குதல்களினால், தமிழ்மக்கள் அடைந்த அவலங்களை இச்சிறுகதையில் க.பாலசுந்தரம் வெளிப்படுத்தியுள்ளார். தமிழர்கள் 'ஷெல்' தாக்குதல்களினால் அதிகமான உயிரிழப்புக்களைச் சந்தித்தமையை இதன் மூலம் அறிய முடிகின்றது.*

**சோதனைச் சாவடிகள்**

*அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் 'அதிபர்' (வீரகேசரி, 29.09.1985) எனும் சிறுகதையில் இவ்வாறான இராணுவத்தினரின் கெடுபிடிகளைக் காணலாம்.*

*'ஊரில் செக்கிங், றவுண்டப் என்றால் ஒரு பிள்ளை கூடப் பாடசாலைக்கு வராது. வகுப்பில் பாடம் நடந்து கொண்டு இருக்கும் பொழுதே யாராவது வம்புக்கு 'ஆமி வருகுது' என்று சொன்னால் போதும் அடுத்த கணம் வகுப்பறையில் ஆசிரியர் மட்டும்தான் நிற்பார்' (ப.30).*

*என்று இராணுவத்தினரின் கெடுபிடிகளையும், அவை சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கத்தினையும் 'அதிபர்' எனும் சிறுகதை வெளிப்படுத்துகின்றது. இளையவனின் 'பெருமைகள்' (07.10.1985) எனும் சிறுகதையிலும் இலங்கை இராணுவத்தினரின் சோதனைக் கெடுபிடிகள் காட்டப்பட்டுள்ளன.*

*'இப்ப போக்குவரத்தெல்லாம் பிரச்சினைதானே றெயிலும் இல்லை துலைவார் அறுபத்தெட்டு இடத்திலை செக்கிங் எண்டு நிண்டால் என்னென்டு பிள்ளையள் வந்து போறது..' (ப.23).*

*இவ்வாறு இராணுவத்தினரின் சோதனைச் சாவடிகளால் தமிழ்மக்கள்படும் அவலங்களை இளையவன் தன்னுடைய சிறுகதையில் வெளிப்படுத்தியுள்ளார். தியாகராஜாவின் 'எரியும் தளிர்கள்' (சிரித்திரன், பெப்ரவரி, 1987) எனும் சிறுகதை, போராட்ட காலங்களில் பல்வேறு இடங்களிலும் தடை முகாம்கள் அமைக்கப்பட்டு இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளைப் பதிவு செய்கிறது.*

*'வவுனியா தடை முகாம், ஓமந்தை தடைமுகாம், ஆனையிறவுத் தடைமுகாம் ஆகிய பகுதிகளில் இறங்கி, நடந்து ஊர்வலம் போனதில் கூட்டுமூட்டாக வலியெடுத்திருந்தது...' (ப.29).*


ISBN: 978-624-5736-55-3

*எனச் சோதனைச் சாவடிகளில் தமிழ்மக்கள் அனுபவித்த துன்பங்கள் காட்டப்பட்டுள்ளன.*

**இந்திய இராணுவத்தின் கெடுபிடிகள்**

*அமைதிப்படை என்ற பெயரில் இலங்கைக்கு வந்த இந்திய இராணுவத்தினர் இறுதியில் ஈழத்தமிழர்களுக்கு எதிரான தாக்குதல்களிலும் ஈடுபட்டமையை இக்காலத் தமிழ்ச் சிறுகதைகளின் மூலம் அவதானிக்க முடிகின்றது. செங்கை ஆழியானின் 'நிம்மதியாகச் சாகவாவது விடுங்கள்' (மல்லிகை, ஜனவரி, 1989) எனும் சிறுகதையில், கிராம சேவகரிடம் இந்திய இராணுவத்தினர் காட்டிய கெடுபிடிகளையும், கிராம சேவகரிடம் வந்திருந்த தமிழ் இளைஞர்களை அவர்கள் கைது செய்து கொண்டு போவதையும் பதிவு செய்துள்ளார்.*

*'பதினைந்து நாட்களுக்கு முன் இப்படிப்பட்ட ஒரு நாளில், வீதியால் ரோந்து சென்ற இந்திய இராணுவத்தினர், அவர் வீட்டில் ஆட்கள் குழுமி நிற்பதைக் கண்டுவிட்டு சுற்றி வளைத்துக் கொண்டார்கள்...'*

*'ஐ ஆம் கிராம சேவகா.. ஜீ.எஸ்... என்ற படி தனது அடையாள அட்டையை அவனிடம் காட்டினார்... அவரிடம் வந்து காத்திருந்த இளைஞர்களில் இருபது பேரை றக்குகளில் ஏற்றிவிட்டார்கள். அவர்கள் பலியாடுகள் மாதிரி விதானையாரை ஏக்கத்துடனும், பயத்துடனும் பார்த்தார்கள்'*

*என இந்திய இராணுவத்தினரின் கெடுபிடிகளைச் செங்கை ஆழியான் தனது சிறுகதையில் வெளிப்படுத்தியுள்ளார். யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் 'நேசக்கரங்கள்' (ஈழநாதம். 1990) எனும் சிறுகதையும் இந்திய இராணுவத்தின் வன்முறைகளைப் பதிவு செய்கிறது.*

*'1987 ஆம் ஆண்டு நவம்பர் 17. விடியலை என்மனது வேண்டி நின்றது.. 'இந்திய ஆமிதானே ஒண்டும் செய்யான்கள்' என்று என் அம்மாவால் என் மனதில் ஏற்றிவைக்கப்பட்ட நம்பிக்கைச்சுடர் அல்லாடத் தொடங்குகிறது.. யாழ் அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றிக் கொண்டிருந்த டாக்டர்களே கொல்லப்பட்டதாக அறிந்தபின்..' (பக்.96 - 97).*

*இவ்வாறு இந்திய இராணுவத்தினரின் தாக்குதல்களால் வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியர்களும் கொல்லப்பட்ட செய்தியைக் கதையாசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.*

**போக்குவரத்து மற்றும் பொருளாதாரத் தடைகள்**

*இளையவனின் 'பிரலாபம்' (30.03.1986) எனும் சிறுகதையில் இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட போக்குவரத்துத் தடைச் செயற்பாடுகள் பேசப்படுகின்றன.*

*'கிளி நொச்சியில் 'ஆமி காம்ப்' போட்டிருக்கு. இரவு ஆறுமணிக்குப் பிறகு ஒரு வாகனமும் முகாமைக்கடக்கக்கூடாது என்ற உத்தரவாம்..' (ப.32).*

*'ரயில்வேறக் பக்கத்தில் போற ரெலிபோன் வயரை அறுத்துப் போட்டான்கள். றெயில் வாறயில்லை பிறகு ஏன் இந்த வயரெல்லாம் இருப்பான் என்று எல்லாத்தையும் அறுத்துப் போட்டாங்கள்..' (ப.33).*

*இவ்வாறு இனப்பிரச்சினை காலத்தில் ஏற்படுத்தப்பட்ட போக்குவரத்துத் தடைகளை 'பிரலாபம்' எனும் சிறுகதையில் இளைவன் வெளிப்படுத்தி உள்ளார். செங்கை ஆழியானின் 'விடியாத இரவும்*

ஒரு மனிதனும்' (மல்லிகை, செப்டம்பர், 1988) எனும் சிறுகதை, இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்டப் பொருளாதார அடக்குமுறைகளை வெளிக்காட்டுகின்றது.

'யாழ்ப்பாணத்திற்குப் போவதற்கு எவ்வித மார்க்கமுமில்லை. இந்தா பேப்பரைப்பார்.. என்ற படி அவனிடம் பத்திரிகையைச் சண்முகம் தந்தான்... முதற்பக்கத்திலேயே யாழ்ப்பாணச் செய்தி விரிந்தது. (ப.40).

'இப்ப ரெண்டு கிழமையாக ஆனையிறவுக்கு அப்பால் யாழ்ப்பாணத்துடன் எவ்விதப் போக்குவரத்துமில்லை. நூற்றுக்கணக்கான லொறிகள் ஆனையிறவுக்கு இங்கால உணவுப் பொருட்களுடன் வாரக்கணக்கில் காத்திருக்குதுகள்... (ப.41).

இவ்வாறு போக்குவரத்துத் தடைப்பட்டதன் மூலம் பொருளாதாரச் செயற்பாடுகள் முடக்கப்படுவதனைச் செங்கை ஆழியான் இச்சிறுகதையில் காட்டுகின்றார். இவ்வாறான செயற்பாடுகள் சிங்களப் பேரரசின் இன அடக்குமுறைச்சிந்தனையைப் பிரதிபலிக்கின்றது.

**அகதி வாழ்வு**

செங்கை ஆழியான் எழுதிய 'திச நாயக்காவும் கந்தசாமியும்' (மல்லிகை, செப்டம்பர், 1985) என்ற சிறுகதை, ராமலிங்கம் குடும்பம் கொழும்பில் இனக்கலவரத்தில் அகப்பட்டு அனுபவித்த கொடுமைகளையும், அங்கிருந்து அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு அகதியாய் வந்த செய்திகளையும் கூறுகின்றது. சொக்கனின் அழைப்பு (ஆலயமணி, ஆனி, 1988) எனும் சிறுகதை இந்திய இராணுவம் அமைதிப்படையாக இலங்கையில் வந்திருந்த காலத்தில் நடந்த இனவெறித்தாக்குதல்களை இச்சிறுகதை வெளிப்படுத்துகின்றது. அக்காலத்தில் யாழ்ப்பாணத்து மக்கள் நல்லூர் கோயிலில் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர். இலங்கை இராணுவத்தினரின் ஷெல்தாக்குதல்களாலும், விமானத்தாக்குதல்களாலும் உயிர் இழப்புக்களும், உடல் உறுப்புக்கள் காயப்படுவதும், குடியிருப்புக்கள் அழிக்கப்படுவதும் அதிகமாக இடம்பெற்றமையை இச்சிறுகதை வெளிப்படுத்துகின்றது.

'வானத்தை மூடிக்கொண்டு ஹெலிகளும் விமானங்களும் பெரிய இரைச்சலோடு பறந்து கொண்டிருந்தன. இருந்திருந்து 'ஷெல்' களின் இடிமுழக்கம் காதுகளைச் செவிடுபடுத்தியது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆயுட்காலம் நிமிஷங்களாகக் குறுகிக் கொண்டிருக்கிறதோ?' (ப.1).

'கந்தப்பர் குடும்பமும், அப்புத்துரை குடும்பமும் சரியாக ஒரு மாத்திற்குப் பிறகு தங்கள் மூட்டை முடிச்சுகளோடு வீடுகளுக்குத் திரும்பிய வேளையில்... அப்புத்துரை வீட்டு முற்றத்தில்... மாஜி அப்புத்துரையினதும், முன்னாள் கந்தப்ப சேகரத்தினதும் உடற்சட்டைகளின் எஞ்சிய பாகங்கள் எலும்புக் கூடுகளாயும், மண்டை ஓடுகளாயும் கிடந்து அவர்களை வரவேற்றன' (ப.12).

எனப் போர்க்கால அகதிகளாக நல்லூர்க் கோயிலுக்குச் சென்றுவிட்டு ஒருமாதம் கழித்து, பழைய நிலை வந்தவுடன் வீடு திரும்பும் போது வீட்டுக்காவலுக்கு விட்டுப்போன வயதானவர்கள் ஷெல்தாக்குதலில் இறந்து எலும்புக்கூடுகளாகக் கிடக்கும் காட்சியை அப்படியே கதையில் வெளிப்படுத்தியுள்ளார்.(சதீஸ்.மு, 2022: பக்.72 - 75).

***போராளிகளின் வீரதியாகங்கள்***

*இளையவன் எழுதிய 'பாசம்' (08.01.1985) எனும் சிறுகதை, 'காணி உறுதி' எனும் சிறுகதைத் தொகுதியில் வெளிவந்தது. அதில் தமிழ்ப்போராளி இளைஞர்களின் போராட்டச் செயல்களும், அவர்களை இராணுவத்தினரிடமிருந்து பாதுகாக்க ஒரு தாய் பட்ட பாடுகளையும் பதிவு செய்துள்ளது.*

*'எனக்காக ஏனம்மா இவ்வளவு கஷ்டப்படுறியள்?.. ஏதோ தம்பி எங்களால் முடிஞ்சதை எண்டாலும் செய்ய வேண்டாமோ? ஆர் பெத்த பிள்ளையளோ எங்கடை விடிவுக்காகத்தானே கஷ்டப்படுறியள். வீடுவாசல் எல்லாத்தையும் விட்டிட்டு தினசரி வேதனைப்படுகிற உங்களைப் போல பிள்ளையள் எத்தனை பேர் தம்பி...' (ப.15).*

*இவ்வாறு விடுதலைப் போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்த தமிழ் இளைஞர்களின் மகிமையை ஒரு தாயின் கூற்றுமூலம் இளையவன் பதிவு செய்துள்ளார். அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் 'திருவிழா' (1986) எனும் சிறுகதை, இலங்கை இராணுவத்தினை விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் அடைத்து வைத்திருந்த காலத்துக் கதையாகும். அதற்கு முந்தைய காலத்துக் கோயில் திருவிழாக்கள் சம்பந்தமான செய்திகளும் கூறப்பட்டுள்ளன.*

*தியாகராஜாவின் 'சிலநேரங்களில் சிலநியதிகள்' (ஈழமுரசு, அக்டோபர், 1986) எனும் சிறுகதை ஒரு தமிழ் விடுதலைப் போராளி, தன்னை விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக்கொள்ளும் செய்தியைக் கூறுகின்றது.*

*'அன்புள்ள அம்மா, குடும்பத்தார் அனைவருக்கும், நான் உங்களை விட்டு வெகுதூரத்திற்குப் போக வேண்டிய நேரம் நெருங்கிவிட்டது. நான் போகிறேன்.. என் நண்பர்கள் எனக்குப் பெற்றவர்கள் மாதிரியுந்தான்!... விரைவில், நாம் நமது சுதந்திர மண்ணில் சந்திப்போம்' (ப.7).*

*எனத் தமிழர்களின் விடுதலைக்காகத் தன்னைப் போராட்டத்தில் இணைத்துக் கொள்ளும் ஒரு இளைஞனின் கதையாகப் பதிவு செய்கிறார் ஆசிரியர். ரஞ்சகுமாரின் 'கோசலை' (1989) எனும் சிறுகதையும் முக்கியமானது. கோசலை எனும் தாய் பெற்றெடுத்த செல்வங்கள் மூன்று அவர்களில் ஆண்கள் இருவர். மூத்தமகன் சீலன் அமைதியும், அடக்கமும் நிறைந்தவன். அம்மாவுக்குச் சீலனில் நல்லபிடிப்பு. ஆனால் இளையவன் குலம் முரட்டுத்தன்மை வாய்ந்தவன். படிப்பு ஓடவில்லை மெக்கானிக்வேலை செய்பவன். பரீட்சையன்று எங்கோ புறுப்பட்ட சீலன் வீடுவரவில்லை. அவன் இயக்கத்திற்குப் போய்விட்டான். அம்மாவின்; நினைவில் இவ்வாறு மீட்டல் செய்யப்படுகின்றது.*

*'இளையவனும் நாலைந்து நாட்களாக வீடுவரவில்லையே!... நடு இரவில் சில இளைஞர்களுடன் குலம் வீடுவந்தான்... ஒரு கையில்லாத நிலையில்... ஓ! இரண்டு பிள்ளைகளும் இயக்கத்திலா?...'*

*என்பதன் மூலம் பிள்ளைகள் விடுதலைப் போராட்டத்தில் இணைந்த பின், அவர்களை நினைத்துத் தவிக்கும் தாயின் சஞ்சலம் இங்கு பேசப்படுகின்றது.*

*'அவர்கள் அடிக்கடி ஊர்களைச் சுற்றி வளைத்தனர். கனரக வாகனங்களின் உறுமலைக் கேட்டவுடன் அம்மா பாதி உயிரற்றுப் போவாள். நீட்டிய துப்பாக்கிகளுடன் 'மகன் எங்கே?' என உறுக்கியபடி அவர்கள் வரும்போது...' (ப.42).*

*என இராணுவத்தினரின் செயற்பாடுகளும் பேசப்பட்டுள்ளன. கோசலையின் சஞ்சலம், அன்றைய ஈழத்தமிழ் அம்மாக்களின் சஞ்சலமாகக் காட்டப்பட்டுள்ளதனை உணரலாம். செ.யோகநாதனின் 'வானமும் கடலும் போல' (1989) எனும் சிறுகதை முற்றுமுழுதாகப் போராட்டகால வாழ்க்கையினைப் பிரதிபலிக்கின்றது. அருளம்பலம் பூனகரியில் இருந்து கொழும்புத்துறைக்குப் பரவைக்கடலூடாகச்சிறிய வள்ளத்தில் திருட்டுத்தனமாகத் தன் அண்ணனைத் தேடிப்போவதும், அவன் அங்குபோய் இன ஒடுக்கு முறையின் அவலங்களைக் கண்டு தானும் ஒரு போராளியாக மாறுவதாகக் கதை அமைந்துள்ளது.*

*'அண்ணனைப் பார்க்க வேணும்... பார்க்க வேணும் என்று ஆச்சி ஓயாமல் கேட்டுக் கொண்டிருக்கிறா. அண்ணன் கொழும்புத்துறையிலை இருக்கிறதாக் கேள்விப்பட்டன். அதுதான் ஒருமுறைமட்டும் அவரை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போய் ஆச்சிக்குக் காட்டலாம் என்று போறன்...' (ப.113).*

*'நான் ஒருநாள் உன்னுடைய அண்ணனை தூரத்திலிருந்து கண்டனான். என்ன வடிவாயிருக்கிறான் அவன். துவக்கும் கையுமாய் கொஞ்சமும் பயமில்லாத சூரப்புலி அவன்...'*

*'எங்களின்ர சனங்களின்ர வாழ்க்கையை எவ்வளவு நாசமாக்கி விட்டார்கள் சாப்பாட்டுச்சாமான் எதுவும் வராமல் தடுத்துப் போட்டாங்கள். கரண்ட், மண்ணெண்ணெய், பெட்ரோல் வராமல் நிறுத்தி விட்டாங்கள். சனங்களை இப்படி வருத்தி அடிமைகளாக்கிப் போடலாம் என்று நினைச்சிட்டாங்க...' (பக்.113 - 114).*

*என்பவற்றின் மூலம் அக்காலப் போராட்டச் சூழலையும், இலங்கை அரசின் அடக்கு முறைகளையும் காட்டுகின்றார் யோகநாதன்.*

*'எத்தனை நாளைக்கு இந்த அநியாயங்களைப் பொறுக்க முடியும்?... எங்களின்ர பொடியன்கள் எவ்வளவு வீரமானவங்கள்.. உயிரை அவங்கள் பெரியதொரு விஷயமாக நினைக்கேல்லை... சின்னப் பெட்டைகள் எல்லாம் இப்போ வேங்கைப் புலிகள் ஆகிட்டாளவை... அதெல்லாம் இருக்கட்டும் தம்பி ஏன் இங்க வந்திருக்கிறாய்...'*

*'நானா? நான் இயக்கத்திலை சேர வேண்டுதான் இங்கை வந்திருக்கிறன்...' (ப.121).*

*எனத் தான் வந்த நோக்கத்தினை மறந்து, மக்களின் நிலமைகளையும் அவலங்களையும் உணர்ந்து இறுதியில் அருளம்பலமும் தன்னைப் போராட்டத்தில் இணைத்துக் கொள்வதாகக் கதையை யோகநாதன் முடித்திருக்கின்றார். இவ்வாறான விடுதலைப் போராட்டம் உச்சம் பெற்ற 1980 - 1990கள் காலப்பகுதிகளில் பெரும் அவலங்களையும், இழப்புக்களையும் தமிழ் மக்கள் அனுபவித்தனர். இவர்களின் சுதந்திர வாழ்க்கைக்காகத் தம்மையே தமிழ் இளைஞர்கள் விடுதலைப் போராட்டத்தோடு ஈடுபடுத்திக் கொண்டனர். இத்தகைய சமூக அனுபவங்களை இக்காலச் சிறுகதைகளில் பெரிதும் காணமுடியும். இனக்கலவரங்கள், இன ஒடுக்குமுறைகள், தமிழ் - சிங்கள இனங்களின் உறவு சீரழிக்கப்பட்டமையால் வந்த வன்செயல்கள், தமிழர்களுக்கு எதிராகப் பேரினவாத அரசு கைக்கொண்ட சட்ட நடைமுறைகள், இதனால் தமிழர்கள் அனுபவித்த அவலங்கள், பேரினவாத அரசிற்கு எதிராகத் தமிழிளைஞர்கள் மேற்கொண்ட விடுதலைப் போராட்டங்கள், மறுதலையாக இனவன்முறைகளால் நிகழ்ந்த தமிழ்மக்களின் துயரநிலைமைகள் என்பன, 1980 - 1990 கள் வரையான காலகட்டத்தில் எழுந்த ஈழத்துத்*

*தமிழ்ச்சிறுகதைப் படைப்புக்களில் தீவிரமாகப் பேசப்பட்டமை அக்கால இனமுரண்பாட்டின் உச்சத்தினைக் காட்டுகின்றன.(சதீஸ்.மு, 2022: பக்.76 - 82).*

***9. முடிவுரை***

***1980*** *களின் பிற்பகுதிகளில் எழுந்த ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் விடுதலைப் போராட்டம் பற்றிய உணர்வுத் தூண்டுதல்களே அதிக படைப்புக்களினூடாக வெளிக்கிளம்பியுள்ளன. விடுதலைப் போராட்டம் உச்சம் பெற்ற இக்காலப்பகுதியில் பெரும் அவலங்களையும், இழப்புக்களையும் தமிழ்மக்கள் அனுபவித்திருந்தாலும், அவற்றினைக் கூறுவதன் மூலம் தனிநாடு கோரிய விடுதலைப் போராட்டத்தின் மூலமே தமிழர்களின் நிம்மதியான வாழ்வினை அமைத்துக் கொள்ளமுடியும் என்ற தமிழ்த் தேசிய உணர்வுச் சிந்தனையை அக்காலச் சிறுகதைகள் வலியுறுத்தியுள்ளன. இதன் மூலம் தமிழ் இளைஞர்களைத் தமிழ்த்தேசிய உணர்வுப் பெருக்குடன் ஒன்றுதிரட்டி, தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுக்கச் செய்து, சுதந்திர தமிழ்த்தாயகத்தை அமைத்துக்கொள்ளும் எதிர்பார்ப்பிலேயே 1980 - 1990 கள் காலகட்ட ஈழத்துத் தமிழ்ச்சிறுகதைகள் இனமுரண்பாடுசார் பிரச்சினைகளைத் தீவிரமாக வெளிப்படுத்தின. இவையாவற்றையும் ஒட்டுமொத்தமாக நோக்கும் போது, காலத்திற்குக் காலம் ஈழத்தில் இனமுரண்பாடுசார் பிரச்சினைகள் வெள;வேறு வடிவங்களில் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இவ்வின முரண்பாடுகளுக்கு முக்கிய காரணங்களாக, சிங்களப் பேரினவாதிகளின் மேலாதிக்கச் சிந்தனைகளே விளங்குகின்றன. அவர்களின் சந்தர்ப்பவாத அரசியல் சிந்தனைகளின் செயல்வடிவங்களினாலும், ஈழத்தில் இனமுரண்பாடுகள் தோன்றியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. பெரும்பான்மையாக விளங்கும் சிங்களப் பேரினவாதிகள் இந்நாட்டில் வாழும் ஏனைய சிறுபான்மை இனங்களையும் தம்முடைய உதிர உறவுகளென எண்ணும் வரை இனமுரண்பாடுகளும் ஏதோ ஒரு வகையில் தொடர்ந்துகொண்டே இருக்கும். ஆகையால் சகோதரத்துவத்தினை இனங்களுக்கிடையில் கட்டியெழுப்பி 'ஒருதாய்நாட்டின் பிள்ளைகள் நாம்' என்ற சிந்தனையை வளர்க்கும் போது முரண்பாடுகளற்ற இன நல்லிணக்கத்துடன் கூடிய சமூகம் உருப்பெறும் என்பது திண்ணம். இனத்தின் அடையாளத்தையும், தனித்துவத்தையும், வரலாற்றையும், எதிர்காலச் சந்ததியினருக்குக் கடத்த வேண்டிய கடமைப்பாடு ஒவ்வொரு மனிதர்களுக்கும் உண்டு. இதனாலேயே ஒரு இனத்தின் சரித்திரம் நிலைப்பேறு அடைகின்றது. 1980 - 1990கள் வரையான காலப்பகுதிகளில் தோன்றி ஈழத்து இன முரண்பாடுகளைப் பேசும் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளை மையப்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டிருப்பதைப் போன்று ஏனைய காலகட்டச் சிறுகதைகளும் ஆய்வுக்குட்படுத்தப்படவேண்டும். அதற்கு இவ்வாய்வு கைவிளக்காக அமையும் என நம்பலாம்.*

***துணைநூல் பட்டியல்***

*இமயவரம்பன். (1988). இலங்கை இன ஒடுக்கலும் விடுதலைப் போராட்டமும். சென்னை: சென்;னைபுக்ஸ்.*

*இளையவன். (1989). காணி உறுதி. சென்னை: பொன்னி வெளியீடு.*

*கணேசலிங்கன், செ. (1996). சிறுகதைகள். சென்னை: பாரிநிலையம்.*

*குமாரி ஜயவர்த்தன, (1987), இனவர்;க்க முரண்பாடு. கொழும்பு: குமரன்புத்தக இல்லம்.*

குணராசா, க. (1993). யாழ்ப்பாணத்து இராத்திரிகள். யாழ்ப்பாணம்: யாழ் இலக்கிய வட்டம்.

கோகிலா மகேந்திரன். (1984). அறிமுகவிழா. தெல்லிப்பளை: சிவன் கல்வி நிலைய வெளியீடு.

சதீஸ், மு. (2022). ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் இனமுரண்பாடு. யேர்மனி: யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம்.

சாந்தன். (1982). கிருஷ்ணன்தூது. திருநெல்வேலி: இலக்கியத்தேடல் வெளியீடு.

சிவஞானசுந்தரம், செ. (1989). நம்பிக்கைகள். யாழ்ப்பாணம்: வரதர்வெளியீடு.

சுதாராஜ். (1983). கொடுத்தல். யாழ்ப்பாணம்: சிரித்திரன் பிரசுரம்.

சுந்தரம்பிள்ளை, ந. (1999). யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம்: மேனகா அச்சகம்.

சோமகாந்தன். (1986). ஆகுதி. யாழ்ப்பாணம்: மல்லிகைப்பந்தல் வெளியீடு.

டானியல் அன்;ரனி. (1987). வலை. யாழ்ப்பாணம்: சமர் இலக்கியவட்ட வெளியீடு.

தணிகாசலம், க. (1988). பிரம்படி. சென்னை: தேசியக்கலை இலக்கியப்பேரவை வெளியீடு.

நந்தினி சேவியர். (1993). அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். சென்னை: தேசியக்கலை இலக்கியப் பேரவை வெளியீடு.

பாலசுந்தரம், க. (1986). அந்நிய விருந்தாளி. யாழ்ப்பாணம்: யாழ் இலக்கியவட்டம்.

மலரன்பன். (1989). கோடிச்சேலை. மாத்தளை: சுஜாதா பிரசுரம்.

மாத்தளைச் சோமு. (1980). தோட்டக்காட்டினிலே. மாத்தளை: மாத்தளைத் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய வெளியீடு.

யோகநாதன், செ. (1985). சுந்தரியின் முகங்கள். சென்னை: நர்மதா வெளியீடு.

யோகநாதன். செ. (1989). கனவு மெய்ப்படும். சென்னை: வேள்பதிப்பகம்.

யோகநாதன், செ. (1989). இன்னும் இரண்டு நாட்கள்;. சென்னை: மானுடம் போற்றுதும் வெளியீடு.

யோகேஸ்வரி சிவப்பிரகாசம். (1997). உணர்வின் நிழல்கள். யாழ்ப்பாணம்: மல்லிகைப் பந்தல் வெளியீடு.

ரஞ்சகுமார். (1989). மோகவாசல். பருத்தித்துறை: யதார்த்தா வெளியீடு.

ஜெகநாதன், எஸ். (1983). மனிதர்கள். சிவகங்கை: அன்னம் வெளியீடு.